அமரர் அதிபர் எஸ்.அம்பலவானர் அவர்களின் சேவை (1954-1962) நினைவாக....

# சாரல்

இதழ்: 06

தைத்திங்கள் 2014
வள்ளுவர் ஆண்டு 2045

**OBA** ஆண்டு செய்தி மடல்
30.06.2014

பழையமாணவர் சங்கம்
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



## அதிபர் அம்பலவாணர்...

அமரர் எஸ்.அம்பலவாணர் B.SC (Hons) (Lond) அவர்கள் எமது கல்லூரியில் ஒரு தசாப்த காலம் அதிபராக இருந்து கல்லூரியை ஒரு உன்னதமான வளர்ச்சி நிலைக்கு இட்டுச் சென்ற பெருமகனாவார். அதிபர் அம்பலவாணர் என்று சொல்கின்றபோது தூய வெண்மையான வேட்டி, நெஷனல், மடிப்புக் குலையாத சால்வையுடன் ஒரு கண்ணியமான கம்பீரத்துடன் நடந்து வரும் உருவம்தான் கண்ணில் நிழலாடுகின்றது.

அதிபர் அம்பலவாணர் அவர்கள் நேரிய நோக்குகள் கொண்ட ஒரு சிறந்த கல்விமானாக இருந்து மாணவர்களுக்கு வழிகாட்டியவர். இன, மத, மொழி, பிரதேசம் பார்க்காது மனித நேயமிக்க ஒரு சேவகனாக தனது கல்வித் தொழிலை மேற்கொண்டவர்.

தலைமைத்துவ பண்புகள் நிறைந்த ஒரு சிறந்த கல்வி நிருவாகியாக அவர் திகழ்ந்தார். தான் பணியாற்றிய சகல கல்லூரிகளிலும் தனது ஆளுமையைப் பதித்தார். திருக்கோணமலையின் கல்வி வரலாற்றில் 1940 மற்றும் 50 களில் நிலைமாறு காலப்பகுதியில் கல்வியை திசைமுகப்படுத்திய பெருமை திரு.அம்பலவாணர் அவர்களையே சாரும்.

திரு.அம்பலவாணர் அவர்கள் எமது கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய காலத்தில் நான் மாணவனாக இருந்தாலும் அவரிடம் நேரடியாக பாடம் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கவில்லை.

அம்பலவாணர் அவர்கள் கிழக்கிலே தம்பிலுவில் என்ற கிராமத்தில் 1911ம் ஆண்டில் சங்கரப்பிள்ளை தில்லையம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். தம்பிலுவில் கனிஷ்ட பாடசாலையில் ஆரம்பக் கல்வியை கற்ற இவர் உயர்தரக்கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியில் பெற்றார். கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியின் ஊடாக லண்டன் பி.எஸ்.சி பரீட்சையில் தேறினார்.

எமது கல்லூரியில்தான் திரு.எஸ்.அம்பலவாணர் அவர்கள் முதன்முதலாக தனது ஆசிரியப் பணியைத் தொடங்கினார். எமது கல்லூரியின் முதலாவது விஞ்ஞான ஆசிரியர் என்ற பெருமை அவருக்கே உரித்தானது. தனது ஆசிரியப் பணியை 1934ம் ஆண்டில் அவர் எமது கல்லூரியில் ஆரம்பித்தார்.

சுவாமி விபுலானந்தர் அவர்கள் 1925ம் ஆண்டில் எமது கல்லூரியை இராமகிருஷ்ண மிஷனுக்காகப் பொறுப்பேற்று கல்லூரியின் வளர்ச்சிக்கான பணிகளை ஆற்றிக் கொண்டிருந்த அதே வேளையில் மட்டக்களப்பில் சிவானந்தா வித்தியாலத்தை தாபிப்பதற்கான பணிகளையும் மேற்கொண்டிருந்தார். 1929 இல் சிவானந்தா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதலாவது அதிபராகவும் சுவாமி விபுலானந்தர் அவர்களே பணிபுரிந்தார்.

சில வருடங்களுக்கு பின்னர் சிவானந்தா வித்தியாலத்திற்கு அதிபராக திரு. அம்பலவாணர் அவர்களை சுவாமி விபுலானந்தர் தேர்வு செய்த போது அப்பதவியை ஏற்றுக் கொள்வதற்காக எமது கல்லூரியில் ஆசிரியாராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு.எஸ்.அம்பலவாணர் அவர்கள் 1936ம் ஆண்டில் அங்கு சென்றார். மட்டக்களப்பு சிவானாந்தா வித்தியாலத்தின் இரண்டாவது அதிபராக திரு.அம்பலவாணர் அவர்கள் நீண்ட காலமாக 1954 வரை கடமையாற்றினார்.

## தூரநோக்கு

ஒழுக்க விழுமியங்களிலும், கல்வியிலும், மொழியியல் தேர்ச்சியிலும்,
இணைப்பாடவிதானங்களிலும் சாதனை படைக்கும் ஒரு முன்மாதிரியான கல்லூரி

## நோக்கு

கல்லூரியின் அடைவுகளை உச்சப்படுத்துவதற்கும், தேவையான வளங்களைத் தேடிக்கொள்வதற்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்களினதும் வளவாளர்களினதும் பங்களிப்புடன் கூடிய சேவை அர்ப்பணிப்பு.

## Vision

"An exemplary College in creating best records in discipline, education, Lingual proficiency and co-curricular activities."

## Mission

"Dedication of Service with the contribution of the resource persons and the old students living in inland and abroad for Obtaning the required resource and Maximizing the achievements of the college"

வெளியீடு : OBA, Trinco, Hindu
e-mail : oba@trincohindu.sch.lk
Web : www.trincohindu.sch.lk/oba/index.php

ஆலோசகர் : திரு.செ.பத்மசீலன்
பதிப்பாசிரியர் : திரு.சண்.பாரதிதாசன்
உதவி பதிப்பாசிரியர் : திரு.ச.சிறிதரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு 1954ம் ஆண்டில் எமது கல்லூரிக்கு அதிபராக திரு.அம்பலவாணர் அவர்கள் வந்தார்கள். எமது கல்லூரியின் வரலாற்றில் சுவாமி விபுலானந்தருக்குப் பின்பு திரு.இராமச் சந்திரா அவர்களும் அவரின் பின்பு திரு.இரகுபதி அவர்களும் அவரைத் தொடர்ந்து திரு.அம்பலாவாணர் அவர்களும் அதிபர் பணியை ஆற்றிச் சென்றதைக் காணமுடிகின்றது. திரு.அம்பலவாணர் அவர்கள் 1963ம் ஆண்டு வரை அதிபராகக் கடமையாற்றினார். இவர் இங்கு அதிபராகக் கடமையாற்றிய காலத்திலே தான் மிஷனரி பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் திட்டத்தில் 1961ம் ஆண்டில் இராமகிருஷ்ண சங்க பாடசாலைகளாக இயங்கிக் கொண்டிருந்த இந்துக்கல்லூரியும். கோணேஸ்வர வித்தியலாயமும் அரசாங்கப் பாடசாலைகளாகக் கையேற்கப்பட்டன.

1963 இல் திரு.அம்பலவாணர் அவர்கள் இரத்மலானை இந்துக்கல்லூரிக்கு அதிபராக மாற்றலாகிச் சென்று அங்கு சிலகாலம் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

திரு.அம்பலவாணர் எமது கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை செலுத்தினார். விஞ்ஞான பாடத்துறையில் மாணவர்களை ஊக்குவித்து வழிகாட்டினார். இரசாயனவியல். பௌதிகவியல். கணிதம் ஆகிய பாடங்களை தனது தனித்துவமான கற்பித்தல் முறைகளினூடாக வினைத்திறனுடன் மாணவர்களுக்கு கற்பித்தார். விஞ்ஞான ஆய்வு கூடங்களின் விருத்திக்கு அரும்பணியாற்றினார். அவரது கற்பித்தல் நுட்பங்கள் பற்றியும். பரிசோதனைகள் ஊடாக விஞ்ஞான கோட்பாடுகளை இலகுவாகப் புரிய வைக்கும் திறன் பற்றியும் அவரிடம் கற்ற மாணவர்கள் சிலாகித்துப் பேசுவதை அறிந்துள்ளோம். 1960இல் கல்லூரியில் அவர் நடாத்திய விஞ்ஞானக் கண்காட்சி திருகோணமலை மாவட்ட மாணவர் மத்தியில் பெரிய உற்சாகத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது.

இன்று எமது கல்லூரி எமது மாவட்டத்தில் மாத்திரமல்லாமல் இம்மாகாணத்திலேயே விஞ்ஞானக் கல்விக்கு ஒரு பெயர் பெற்ற கல்வி நிறுவனமாக விளங்குவதை கல்வி உலகில் உள்ள யாவரும் அறிவர். இதற்கான அடிப்படை சுவாமி விபுலானந்தர் காலத்திலேயே விதைக்கப்பட்டது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். திரு.அம்பலவாணர் அவர்கள் விஞ்ஞானக் கல்வியின் பால் எடுத்துக் கொண்ட ஆர்வமும். அக்கறையும் இன்று விஞ்ஞானக் கல்வியில் எம்மைத் தலைநிமிர்ந்து நிற்க வைத்துள்ளது என்பது மறக்கப்படக் கூடாத ஒரு உண்மையாகும்.

அக்கால கட்டத்தில் கடற்படைத்தளம். துறைமுகம் என்பற்றில் வேலைவாய்ப்புக்கள் கிடைத்தமையினால் திருகோணமலை மாணவர்கள் பொதுவாக உயர்கல்வியில் நாட்டம் கொண்டிருக்கவில்லை. சிலர் எழுதுவினைஞர். ஆசிரியர் போன்ற உத்தியோகங்களை பெற்றுக்கொண்டனர். ஆனால் திரு.அம்பலவாணர் அவர்களது வருகையின் பின்னர் மாணவர்கள் விஞ்ஞானக் கல்வித்துறையில் ஊக்குவிக்கப்பட்டதனால் மருத்துவத்துறை சார்ந்த உத்தியோகங்களையும் பெற்றுக் கொள்ளும் வழி ஏற்பட்டதென்று பழைய மாணவர்கள் இன்று கூறுகின்றனர்.

'அம்பலவாணர் அகம்' என்ற பெயரில் இன்று கல்லூரியில் காட்சியளிக்கின்ற மாடிக்கட்டிடம் திரு.அம்பலவாணர் அவர்களால் கட்டப்பட்ட கல்லூரியின் முதலாவது மாடிக் கட்டிடமாகும். கல்வி வளர்ச்சியிலும். பௌதிக வள விருத்தியிலும் அக்கறை கொண்டு உழைத்த அதிபர் அவர்கள் தனது குடும்பத்தினருடன் கல்லூரி விடுதியிலேயே வாழ்ந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு இடையறாது தொண்டாற்றினார்.

1996 இல் அவுஸ்ரேலியாவில் உள்ள தமது பிள்ளைகளுடன் சேர்ந்து வசிப்பதற்காக செல்வதற்கு முன் திருகோணமலை வந்து கோணேஸ்வரத்தையும் எமது கல்லூரியையும் தரிசிக்க விரும்பினார். அவரை வரவேற்பதற்கு கல்லூரி தயாரானபோது உடல்நலக்குறைவு காரணமாக அவரால் திருகோணமலைக்கு வரமுடியாது போய்விட்டது. கொழும்பில் அவருக்கு ஒரு பிரியாவிடை வைபவம் நடைபெற்ற போது எமது பழைய மாணவர்கள் சிலர் அதில் கலந்து கொண்டார்கள்.

அதிபர் அவர்கள் அவுஸ்ரேலியா சென்று சில மாதங்களில் 05.10.1996 இல் காலமாகிய செய்தியை கேள்வியுற்றபோது மிகவும் கவலை கொண்டோம். அன்னாருக்கான ஒரு அஞ்சலிக் கூட்டத்தை 06.11.1996 இல் கல்லூரியில் நடாத்தினோம்.

இராமகிருஷ்ண பாரம்பரியத்தில் எமது கல்லூரியை வளர்த்துச் சென்றவர் எமது அதிபர் அவர்கள். எங்கெங்கெல்லாமோ இருந்து வருகின்ற ஆசிரியர்களும் மாணவர்களும் இக்கல்விக் கூடத்தில் சங்கமிக்கும் போது அவர்களையெல்லாம் ஒருவழிப்படுத்துகின்ற நெறிகளை மரபாகக் கொண்டவர்கள் நாம். இந்த எமது மரபு எமது மூத்த ஆசான்களால் எங்களுக்கு அளிக்கப்பட்டதாகும். எமது மூத்த ஆசான்கள் எமக்கு கலங்கரை விளக்கமாக இருக்கின்றார்கள். அவர்கள் ஏற்றி வைத்த கல்வி என்ற ஜோதி அணையாமல் பிரகாசிக்கின்றது. எமது கல்லூரியின் வளர்ச்சியில் எமது ஆசான்கள் கொண்டிருந்த ஈடுபாடும் அர்ப்பணிப்பும்தான் இன்று நாம் கல்விப் பாதையில் தளம்பாமல் செல்லும் பக்குவத்தை அளிக்கின்றது.

சி.தண்டாயுதபாணி
முன்னாள் அதிபர்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருக்கோணமலை.

---

## புலமைப்பரிசில் பரீட்சையின் வளர்ச்சிப்போக்கு.......

எமது கல்லூரியானது ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் திருக்கோணமலை மாவட்டத்தில் ஓர் முதன்மைப் பாடசாலையாக சிறந்து விளங்குவது யாவரும் அறிந்ததே. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையும். நிர்வாகத்தின் சிறந்த வழிகாட்டலும். மாணவர்களின் விடாமுயற்சியும் இப்பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதில் சக்தி வாய்ந்த பங்களிப்பை வழங்குகின்றன.
இவ்வெற்றிப் பாதையில் கடந்த 2013 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பெறுபேறுகள் ஒரு மைற்கல்லாக அமைகின்றது. அதன் பெறுபேறுகள் பின்வருமாறு

| | |
|---|---|
| விண்ணப்பித்தோர் | - 175 |
| தோற்றியோர் | - 170 |
| மாவட்ட வெட்டுப்புள்ளி | - 152 |
| தகைமை பெற்றோர் | - 59 |
| 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | - 159 |
| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | - 140 |
| உதவித்தொகை பெற தகுதியுடையோர் | - 15 |

மேற்படி பெறுபேறுகளின் அடிப்படையில் எமது கல்லூரியின் புகழுக்கு வெற்றிப் பெறுபேறுகளைப் பெற்ற தந்த மாணவர்கள் விபரம்

| பெயர் | புள்ளி | மாவட்டநிலை |
|---|---|---|
| செல்வன். ஜெயரூபன் ரதீசன் | 185 | 5 |
| செல்வன் உதயசிறி பெல்ரன் | 184 | 7 |
| செல்வன் சற்குணேஸ்வரன் பரத் | 183 | 10 |
| செல்வன் மனோகரன் அபிவருணன் | 183 | 10 |

இச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தருவதற்கு கடின உழைப்புடனும் அயராத ஊக்கத்துடனும் வழிகாட்டிகளாக செயற்பட்ட ஆசிரியர்களான திருமதி. பிரசாந்தி சுரேஸ்குமார். திரு உதயகுமார் சுஜிதரன் . திருமதி திலகராணி கலைச்செல்வன். ஜனாப். அப்துல் ரகுமான் இர்பான். செல்வி ஜனனி பொன்னம்பலம். திருமதி. உதயகௌரி ஸ்ரீதரன். திரு முகமட் தௌபீக் இஜாஸ் அகமட். திருமதி ஜெனிற்றா சுரோமி ஜெயராஜ் ஆகியோருக்கும் சிறந்த ஆலோசனைகளையும். வழிகாட்டல்களையும் வழங்கிய இணைப்பாளராக கடமையாற்றிய செல்வி. விஜயலசக்ஷ்மி சிவபுண்ணியம் அவர்களுக்கும் கல்லூரியின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எமது கல்லூரியில் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் மாவட்டத்தின் முதல் பத்து இடங்களுக்குள் வரும் எமது கல்லூரி மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கி ஊக்குவித்து. அடுத்துவரும் தலைமுறையாளருக்கும் ஒரு உந்துதலை வழங்கி வருகின்றனர். இக்கைங்கரியத்திற்காக எமது கல்லூரியின் சார்பில் அவர்களுக்கும் மனமுவந்து நன்றியைத் தெரிவிப்பதோடு தொடர்ந்து இவ்வாறு மாணவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுமாறு எமது மாணவ சமுதாயத்தின் சீரான வளர்ச்சி படிகளாக அமைந்து உதவிகள் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

திரு. ந. சங்கரதாஸ்
உதவி அதிபர்(ஆரம்பப்பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் செல்வி.கு.சதாசிவம் ஆசிரியரின் ஞாபகார்த்த நிலையத்தினால் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வரும் விஞ்ஞான வினா விடைப்போட்டிகளின் நிழற்படங்கள்













# பொன் அணிகளின் சமர்

"பொன் அணிகளின் சமர்" என்று வர்ணிக்கப்படும் மாபெரும் கிரிக்கெற் போட்டி கடந்த 27.05.2014 அன்று இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றிருந்தது. இராமகிருஷ்ண சங்கத்தினால் நிர்வாகிக்கப்பட்ட கிழக்கின் இருபெரும் மாவட்டங்களை திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் இருபெரும் பாடசாலைகளான இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரி அணியினரும். இ.கி.ச.சிவானந்தா வித்தியால அணியினரும் கலந்துகொள்ளும் இருபத்துதொரவது மாபெரும் கடினப்பந்து கிரிக்கெற் போட்டியாக இது அமைந்திருந்தது. இரு பாடசாலைகளுக்குள் மட்டுமல்லாது இரு மாவட்டங்களுக்கும் இடையிலான நட்புறவை வளர்த்துக் கொள்ளவென்று 1993ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்போட்டி இன்று வரை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆரம்பிக்கப்பட்ட முதலாவது போட்டி மென்பந்து போட்டியாக ஆரம்பிக்கப்பட்டாலும் எதிர்கால மாணவர்களின் வளர்ச்சி கருதி அது பின்னர் கடினமென்பந்து போட்டியாக மாற்றியமைக்கப்பட்டது. இலங்கையிலேயே இரண்டு மாவட்டங்களுக்கு இடையில் நட்பு ரீதியாக முதல்முதலில் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒரு போட்டி என்ற பெருமையும் இதற்குண்டு.

தமிழர்களின் அடையாளமே வீரம் தான்... வீரத்தைக்கெவளிக் கொண்டு வரும் களமே சமர்... நல்ல எண்ணம். நல்ல பண்பு. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை. பக்குவம் என்பவற்றை அடைவதற்கான நட்பு ரீதியிலான ஒரு சமரே இது. வெற்றி. தோல்வி என்பதற்கு அப்பாற்பட்டு இரு பாடசாலைகளுக்குமான நல்லுறவை மேம்படுத்துவதற்கான ஒரு களமே இது. இதுநாள் வரை அந்த எண்ணத்திலும். செயலிலுமிருந்து இவ்விரு பாடசாலைகளும் இம்மியளவேனும் மாறியதில்லை என்பதே உண்மை.

இராமகிருஷ்ண சங்கத்தினரால் வளர்க்கப்பட்ட இவ்விரு பாடசாலைகளினதும் பொதுவான நிறம் தங்க மஞ்சள். இந்த வர்ணம் குறிப்பது தூய்மை. சாந்தம். முயற்சி. தன்னம்பிக்கை... இவ்விரு பாடசாலைகளினது வீரர்களின் வெளிப்பாடும் அதுவேயாகி நிற்கிறது.

வருடாந்தம் நடைபெறும் இந்நிகழ்வு ஒரு வருடம் திருகோணமலை மண்ணிலும் மறு வருடம் மட்டக்களப்பு மண்ணிலும் என மாறி மாறி நடைபெறும். இவ்வருட போட்டி நிகழ்வுகள் திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது. எனினும் ஆரம்பித்து இருபத்திஇரண்டாவது வருடத்தை எட்டியபோதும் இருபத்திஓராவது போட்டியாக இப்போட்டி அமையக் காரணம் கடந்த 2006ம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தையும் இந்துக்கல்லூரியையும் உலுக்கி எடுத்த துக்ககரமான ஒரு சம்பவம் நகரில் ஏற்பட்டமையினால் தவிர்க்கமுடியாத காரணத்தினால் அவ்வருடம் போட்டி இரத்துச் செய்யப்பட்டதாக போட்டி ஆரம்பிக்கப்பட்ட வருடத்திலிருந்து இவ்வருடப் போட்டிவரை இந்துக்கல்லூரி அணியை மிகச்சிறப்பாக வழி நடாத்தி வருபவர்களில் ஒருவரான ஆசிரியர் திரு.சி.சசிக்குமார் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

பாடசாலை "பாண்ட்" வாத்திய இசைக்குழுவினரின் வாத்திய இசையுடன் பிரதம விருந்தினர் திரு.அன்டனி மார்க் பொலிஸ் அத்தியடசகர். திருக்கோணமலை பொலிஸ் பிரிவு. சிறப்பு விருந்தினர் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.ந.விஜேந்திரன். சிவானந்தா வித்தியாலய அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள். ஏனைய பிரமுகர்கள் ஆகியோர் கோணேஸ்வரா இந்து கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர். பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர். பெற்றோர்கள். பழைய மாணவர்கள். நலன்விரும்பிகள் ஆகியோரால் வரவேற்கப்பட்டு பாடசாலை மைதானத்துக்கு அழைத்துவரப்பட்டார்கள். தொடர்ந்து தேசியக் கொடி. பாடசாலைக் கொடி. விளையாட்டுக் கொடி என்பன ஏற்றி வைக்கப்பட்டு விழா இனிதே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போட்டியின் சவால் கிண்ணமான சுவாமி விபுலானந்தா நினைவுச் சவால் கிண்ணமானது சிவானந்தா வித்தியாலய அதிபரிடம் கையளிக்கப்பட்டு சுவாமி இராமகிருஷ்ண நினைவு சவால் கிண்ணம் என பெயர் சூட்டப்பட்ட புதிய சவால் கிண்ணமானது அறிமுகப்படுத்தப்படும் வைபவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க ஒன்று.

அதனை தொடர்ந்து போட்டி நடுவர்களான திரு.ய.ட.நிலந்தகுமார். மு.உமாசுதன் ஆகியோரால் நாணயச் சுழற்சி மேற்கொள்ளப்பட்டு போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்போட்டியின் மேலதிக நடுவராக திரு.ந.நித்தியகுமார் கடமையாற்றியிருந்தார். போட்டித் தீர்ப்பாளர்களாக ஜனாப் A.பசீர் அமீர். திரு.S.சுரேஸ்குமார் ஆகியோர் ஈடுபட்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இ.கி.ச.கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அணித்தலைவர் செல்வன் S.திவாகரன் முதலில் துடுபெடுத்தாட விருப்பம் தெரிவித்தார். அதிகளவு ஓட்டங்களை குவிக்கவேண்டும் என்ற முனைப்புடன் களமிறங்கிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் பெரிதாக ஜொலிக்கவில்லை. பத்தொன்பது ஓட்டங்கள் இருக்கும் போது தனது முதலாவது விக்கெட்டினை இழந்த இந்துக்கல்லூரி அணியினரின் விக்கட்டுக்கள் குறிப்பிட்ட இடைவெளியில் தொடர்ந்து வீழ்ந்து வண்ணமே இருந்தது. ஒரு சிறந்த இணைப்பாட்டம் ஒன்று கிடைக்கவில்லை. அதிகளவு ஓட்டமான இருபத்திரெண்டு ஓட்டங்களை செல்வன் G.B.பாணுசாந் பெற்றுக்கொடுத்திருந்தார். இறுதியல் 41.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து நூற்றிப்பத்தொன்பது ஓட்டங்களை மாத்திரமே அவர்களால் பெறமுடிந்தது.

ஒன்பதாவது தடவையாக வெற்றியைப் பதிவுசெய்து கொண்ட சிவானாந்தா அணியினரின் மகிழ்ச்சி ஆரவாரத்தில் அனைவரும் கலந்து கொண்டார்கள். இரு அணி வீரர்களும் மற்றும் அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள். அபிவிருத்திச் குழுவினர். பழைய மாணவர் சங்கத்தினர். நலன்விரும்பிகள் ஆகியோரும் ஒருவருக்கு ஒருவர் கைகுலுக்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டார்கள். இது ஒரு சிறந்த ஆரோக்கியமான எதிர்காலத்தை எம் கண்முன்னே காட்டியது.

முன்னாள் இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அதிபர். திரு.சி.தண்டாயுதபாணி மற்றும் முன்னாள் இ.கி.ச.சிவானாந்தா வித்தியாலய அதிபர் திரு.ஆர்.விஜயரெட்ணம் ஆகியோரின் பெருமுயற்சியிலும் முன்னாள் வடகிழக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவிப்பணிப்பாளராக இருந்த திரு.யு.ளு.குணரெட்ணம் மற்றும் விவேகானந்தா நரேந்திரா ஆகியோரின் எண்ணக்கருவிலும் பிறந்த இந்த பொன் அணிகளின் சமரானது இன்றும் பல நூற்றாண்டுகள் மேலும் சிறப்பாக இப் போட்டியை நடத்த வேண்டும் என்பதே காலத்தின் தேவையும் இங்கு அதுவேயாய் இருக்கிறது.

போட்டி நிறைவுபெற்றதைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றிருந்தஉ. இதில் கருத்துத் தெரிவித்திருந்த இவ்விரு பாடசாலைகளினதும் அதிபர்களது ஒரு மித்த கருத்தாக விளங்கியது எதிர்காலங்களிலும் இவ் ஒற்றுமையுடன் இரண்டு பாடசாலைகளும் விளங்கி ஆரோக்கியமாகவும் சிறப்பாக நடைபெற எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆக்கம் : இ.அசோக்

# சக்திT.Vயின் விவாதாப்போட்டியில் 1ம் இடத்தைப்பெற்ற எமது மாணவர்களின் சாதனை



இயற்கை எழில் கொஞ்சும் திருக்கோணமலை நகரமத்தியில் விளங்கும் தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் சித்திக்கு வழிவகுக்கும் சித்திவிநாயகர் துணையுடன் சிறந்த அதிபரின் வழிகாட்டலும் உறுதுணையாக இயங்கும் பிரதி அதிபர்கள். பகுதித்தலைவர்கள். அனுபவும் தேர்ச்சிமிக்க ஆசிரியர்கள். மாணவர்கள். கல்விசாரா ஊழியர்கள். பழையமாணவர்கள் அனைவரது கூட்டுமுயற்சியோடு கல்விமற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் அரிய பல சாதனைகளைப் படைத்து முன்னிலையில் திகழ்கிறது.

"உள்ளத்தால் எண்ணத்தால் ஒன்றுபடும் போது செயல் வெற்றி பெறுகின்றது" வெற்றிச் சாதனை குவிக்கப்படும் அந்தவகையில் சக்திT.Vவியினால் நடாத்தப்பட்ட தேசிய ரீதியிலான விவாதாப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வு மிகச்சிறப்பாக 08.06.2014அன்று அதிபர் தலைமையில் எமது கல்லூரியில் நடைபெற்றது.

சக்திT.Vயின் சாதனை பற்றி நோக்கின் நாடாளாவிய ரீதியில் மாணவர்களிடம் "இலைமறைகாய் போல் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணரும்" நோக்குடன் அவர்களிடம் காணப்படும் மொழியாற்றல் பேச்சுத்திறனை விவதாப் போட்டியாக வெளி உலகிற்கு எடுத்துக்காட்டிய சிறந்த ஊடகமான சக்திT.V விளக்குகின்றது. அந்தந்த இடங்களிற்கு சக்திT.V ஊடகவியலாளர் வருகைதந்து விவாத தெரிவுப் போட்டியினை நடாத்தி வெற்றி பெற்றமாணவர்களை தொடர்ந்து பல்வேறு சுற்றுக்களாக கொழும்பில் உள்ள சக்திT.V கலையகத்திற்கு அழைத்து விவாதப்போட்டியினை நடாத்தி தேசியரீதியில் எமது மாணவர்கள் சாதனை படைக்க வழிசமைத்திருந்தனர். அவர்களுக்கும் எமது நன்றியினையும். பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறான விசேட சுற்றில் எமது கல்லூரியில் இருந்து செல்வன்.மெய்யழகன் சாருஜன். செல்வன்.ஜனகன் சாரங்கன். செல்வன்.சுகுமாரன சுஜன். செல்வன்.திருக்குமரநாதன் கோபிபிரகாஷ். செல்வன். ஜெயக்குமார் பிரணா ஆகியோர் கலந்துகொண்டு பலபாடசாலைகளுடன் நேருக்குநேர் மோதி தங்களுடைய இனிய தமிழ்மொழியாற்றலாலும் வாதத்திறனாலும் போட்டிபோட்டு 1ம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர் உண்மையிலே என்றும் பாராட்டுக்குரிய விடயமாகும்.

இவர்கள் எதிர்கொண்ட கல்லூரிகள் இரத்மலானை இந்துக்கல்லூரி. மட்டக்களப்பு இந்துக்கல்லூரி. கொழும்பு றோயல் கல்லூரி. யாழ் இந்துக்கல்லூரி இறுதியாக ஓட்டமாவடி மத்தியகல்லூரி அனைத்துடனும் மாபெரும் சவாலை எதிர்நோக்கி வெற்றிப் பாதையிலே வீறுநடைபோட்டு சாதனை படைத்துள்ளனர். இவர்களுடைய வெற்றிப்பாதையிலே அதிபர். பிரதிஅதிபர்கள். பகுதித்தலைவர்கள். திரு.S.P.சுரேஸ்குமார் ஆசிரியர் திருமதி.வ.வசீகரன் ஆசிரியர் தமிழ்மொழிப்பாட ஆசிரியர்கள். பழையமாணவர்கள். பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் இணைந்து செயற்பட்டு உழைத்தனர் என்பது போற்றுதற்குரியதாகும்.

ஒழுக்கப் பண்பும் உயர் இலட்சியத்தையும் உறுதியாககொண்ட எமது இந்துக்கல்லூரி "உங்களுக்கு தேவையான சக்தியும் செயலும் ஊக்கமும் உங்களிடம் தான் இருக்கின்றன என்பதை முழுமையாக நம்பினால் தான் இவை இரண்டும் நீர் வீழ்ச்சிபோல் தங்குதடையின்றி உங்களுக்குகிடைக்கும்" என்ற கூற்றுக்கிணங்க இனிவரும் காலங்களிலும் கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் வெற்றிச் சாதனையைபடைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் கல்லூரி வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கிச் செல்லும் என்று உறுதி பூணுகின்றோம்.

திரு. K. ஞானச்செல்வன்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பொது சாதாரன மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களின் 2013ம் ஆண்டுக்குரிய உயர் அடைவு மட்டம் பற்றிய ஓர் ஆய்வு

## G.C.E A/L Streamwise Results Analysis - 2013

| Stream | Att | No.App | No.sat | Number of Subject | | | | | | | | Qualify to apply for University | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | % | 2 | % | 1 | % | 0 | % | | |
| Bio - Sci | 1 | 45 | 45 | 27 | 60.00 | 6 | 13.33 | 6 | 13.33 | 6 | 13.33 | 27 | 60.00 |
| | 2 | 17 | 17 | 15 | 88.24 | 1 | 5.88 | 1 | 5.88 | 0 | 0 | 15 | 88.24 |
| | Total | 62 | 62 | 42 | 67.74 | 7 | 11.29 | 7 | 11.29 | 6 | 9.67 | 42 | 67.74 |
| Maths | 1 | 55 | 55 | 28 | 50.91 | 4 | 7.27 | 8 | 14.55 | 15 | 27.27 | 28 | 50.91 |
| | 2 | 20 | 20 | 14 | 70.00 | 4 | 20.00 | 0 | 0.00 | 2 | 10 | 14 | 70.00 |
| | Total | 75 | 75 | 4 | 56.00 | 8 | 10.67 | 8 | 10.67 | 17 | 22.66 | 42 | 56.00 |
| Commerce | 1 | 87 | 87 | 43 | 49.43 | 13 | 14.94 | 8 | 9.20 | 23 | 26.43 | 43 | 49.43 |
| | 2 | 10 | 10 | 5 | 50.00 | 1 | 10.00 | 0 | 0.00 | 4 | 40 | 5 | 50.00 |
| | Total | 97 | 97 | 48 | 49.48 | 14 | 14.43 | 8 | 8.25 | 27 | 27.83 | 48 | 49.48 |
| Arts | 1 | 10 | 10 | 8 | 80.00 | 1 | 10.00 | 1 | 10.00 | 0 | 0 | 8 | 80.00 |
| | 2 | 2 | 2 | 2 | 100.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0 | 2 | 100.00 |
| | Total | 12 | 12 | 10 | 83.33 | 1 | 8.33 | 1 | 8.33 | 0 | 0 | 10 | 83.33 |

## G.C.E O/L Results Analysis - 2013

| S.No | Description | No. |
|---|---|---|
| 01. | Eligible for Advance Level | 140 |
| 02. | Eligible for Advance Level in Stream of Bio and Maths | 120 |
| 03. | Advance Level in Stream of Commerce | 11 |
| 04. | Advance Level in Stream of Arts | 9 |
| 05. | Not eligible for Advance level | 29 |
| 06. | Absenteeism | 2 |

## G.C.E. O/L 2013 DECEMBER - BEST PERFORMANCE

### 9A

1. THAVAKODIRASA SHRIRAAM
2. THIRUKUMARANATHAN GOPY PRAGASH
3. CHANDRAVARNAN PRAHALATHAN
4. GNANACHELVAM KIRUTHIKAN
5. ARUNTHAVARAJAH KRISHANTHAN
6. SOUNTHARARAJAN ABESHEGE

### 8A, B

1. SUBENDRAN JAYALAKSHAN
2. MAHENDRARAJAH THARSHIGAN
3. THURAINAYAGAM ANUSHANTH
4. MOHAMED MARZOOK MOHAMED SHAKOOR
5. MOORTHY SUJEEVAN
6. RATNASINGAM DINESH
7. PARAMASIVAM JANARTHTHAN
8. PARTHEEPAN SHANKEERTHEN
9. SRITHARAN GOUTHAM
10. NADESALINGAM PARIPOORANAN
11. MOHAMMED JIFFRY WASEEM AKMAL

### 8A, 1C


1. NAVANESAN KABILAN
2. DEVARAJAN SEIRAKSHAN
3. IDHREES IZZAD HUZAIN
4. RAJENDREN GOBYPRASATH
5. JAYASOTHINATHAN HAMSALOJAN
6. RAJMOHAN KISHOTH

### 8A

1. NANTHAKUMAR THIBAKARAN

### 7A

1. RAHMATHULLAH MOHAMED ZAHRAN
2. BENJAMIN JASHUWA NILANKAN
3. GUNASINGUM TILAKSHAN
4. PULANTHARARAS MANORAJ
5. SIVAKUMAR DIVARSHAN
6. KUMANAN PREMASHANTH
7. NADARASA JATHUSHANAN
8. JEYAPALU JATHUSHAN
9. KULENDRARAJAH JAIKISHEN
10. MAHROOF MOHAMED HIMAS
11. THAHIR NAFRAS MOHAMMED
12. SELVENDRAN PAAVALAN
13. VARATHARAJAH THANOJ NIDYAAHAR
14. RAJENDRAN HARISHRAJ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடந்து முடிந்த கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பவளவிழா நிகழ்வு





ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பவளவிழா நிகழ்வு 18.10.2013ம் திகதி மிகவும் அழகுறவும் சிறப்புறவும் நடத்தி முடிக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக எமது பழைய மாணவரான பேராசிரியர் S.சிவசேகரம் அவர்களும் சிறப்பு விருந்தினராக எமது பழைய மாணவி பேராசிரியர் R.சாந்தினி அவர்களும் விஷேட விருந்தினர்களாக கனடா பழைய மாணவர் சங்கத்தலைவர் கு.தயாநிதி. பழைய மாணவர் K.கோபாலசிங்கம் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் N.விஜேந்திரன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சிக்கும். உயர்ச்சிக்கும் பங்களிப்பு செய்த சங்கத்தின் தலைவர்கள். செயலாளர்கள் மற்றும் பொருளாளர்கள் அனைவரும் பாராட்டி கௌரவிக்கபப்பட்டனர்.

இப்பவள விழா நிகழ்வின் ஓர் முக்கிய அங்கமாக "பவளவிழா மலர்" வெளியீடும் இடம்பெற்றது. இம்மலர் சங்கத்தின், வரலாற்றினையும் அதன் படிமுறை வளர்ச்சிகளையும் மேலும் இன்னோரன்ன முக்கிய இலக்கிய கலை சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கமாய் கொண்டு வெளியிடப்பட்டிருந்தது. 1937ம் ஆண்டு பழைய மாணவர் சங்கம் இயங்கியிருந்தமைக்கான அடி ஆதாரமாக கிடைக்கப் பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் இன் நிகழ்வுக்கான முன்னெடுப்புக்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

" அகவை எழுபத்தைந்தை அழகுற கொண்டாட
உவகையோடு பழைய மாணவர்களே ஒன்று கூடுங்கள்" என்ற வாசகம் பொறித்த ஸ்ரிக்கர்கள் எங்கும் பரவிக் காணப்பட்டது. அத்துடன் இந்நிகழ்வின் விழிப்புணர்வுக்காக பழைய மாணவர்களின் வீதி ஊர்வலம் ஒன்று எல்லோரையும் கவரும் வகையில் இடம்பெற்றிருந்தது.

இப்பவளவிழா நிகழ்வினை அழகுறவும், சிறப்புறவும் நடாத்தி முடிப்பதற்கு பல வழிகளிலும் பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள் பெரிதும் தமது ஒத்துழைப்பினை நல்கியிருந்தனர்.

1937-2012 இக்காலப்பகுதியில் ஆண்டு எழுபத்தைந்தினை பழைய மாணவர் சங்கம் அடைந்திருந்தது எனினும் 2012ம் ஆண்டு பவளவிழா நிகழ்வினை நடாத்தி முடிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும்கூட வேலைப் பளுக்களின் மிகை காரணமாக தொடர்ந்து வந்த 2013ம் ஆண்டில் இந் நிகழ்வு இனிதே நடாத்தி முடிக்கப்பட்டிருந்தது. மேலும் இச்சங்கமானது வளர்ச்சி கண்டு தனது நூற்றாண்டு விழாவையும் இனிதே நடாத்தி முடிக்க வேண்டும் என வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருள் என்று கிடைக்கப் பிராத்திப்போமாக.

சண்.பாரதிநாதன்
பழைய மாணவர் சங்க உறுப்பினர்.

# நகர்புறகிராமப்புற மாணவர்களுக்கிடையில் உளவள மேம்பாட்டினை வளர்த்தல்.

தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கல்லூரி நிர்வாகத்துடன் இணைந்து பல செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளையும் வலயமட்ட அடிப்படையில் ஒன்றிணைந்து கடந்த நான்கு வருடங்களாக மறைந்த செல்வி. கு.சதாசிவம் ஆசிரியரின் ஞாபகர்த்தமாக விஞ்ஞான வினாவிடைப் போட்டிகளை நடாத்தி வருகின்றது. இப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கபடுவதுடன் வெற்றி பெறும் பாடசாலைகளுக்கு பணப் பரிசில்களும் அளிக்கப்பட்டு வருகின்றது. ஒரு சிறந்த செயல்திட்டமாக க.பொ.சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கு கருத்தரங்குகளையும். பரீட்சைகளையும் நடாத்தி வரும் இந்நிகழ்ச்சியானது பழைய மாணவர் சங்கத்திற்கு பெருமை சேர்க்கும் ஒரு விடயமாக அமைகின்றது.

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களையும். ஆசிரியர்களையும் இணைத்து கிராமப்புறத்தில் உள்ள பாடசாலைகளுக்கு சென்று அங்குள்ள பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்து உரையாடி தேவையான பயனுறுதி வாய்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல் ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும். இதேபோல் அங்குள்ள மாணவர்களையும் ஆசிரியர்களையும் நகர்புற எமது பாடசாலைக்கு அழைத்து வந்து கலந்தாலேசித்து சில தேவையான. பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழிசமைப்பதன் மூலம் மாணவர்களின் உளவளத்தினை மேம்படுத்தலாம்.

அத்துடன் மாணவர்களுக்கிடையில் போட்டி பரீட்சைகளை நடாத்தி அவர்களின் அடைவுமட்டங்களை மீள் பரிசீலனை செய்து மேலும் அடைவுமட்டத்தின் அதிகரிப்புக்கு வழிவகைகள் செய்தல் சாலச் சிறந்தாகும்.

நகர்புற கிராமபுற பாடசாலை மாணவர்களை இணைத்து கலந்தாலேசித்து நிறைகுறைகளை அலசுவதன் மூலமும் எண்ணங்களையும். கருத்துக்களையும் பரிமாறி பகிர்ந்து கொள்வதன் மூலமும் விழிப்புணர்வினை மாணவர்களின் மனதில் விதைக்கலாம் என்பது ஒரு தெளிவான உண்மை. எனவே சமூக இணக்கப்பாட்டுடன் கல்வியை முன்னெடுப்பது எல்லோராலும் வரவேற்கத்த விடயமாகும்.

சா.சிறிதரன்
செயலாளர். - பழைய மாணவர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கான உளவள மேம்படுத்தல் செயலமர்வு







இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான Dr.வன்னித்தம்பி இரத்னேஸ்வரன் அவர்கள் 25 வருட கால இடைவெளிக்குப் பின் தனது சொந்த ஊரான திருக்கோணமலைக்கு வருகை தந்திருந்தார். தான் கற்ற கல்லூரிக்கு மதிபளிக்கும் முகமாக தனது தொழில் சார் அனுபவம், கல்வித்துறையில் ஓர் உயர்நிலை அடைவுக்கான வழிவகைகள் போன்ற விடயங்களை கருப்பொருளாக முன்நிறுத்தி தனது செயலமர்வினை திறம்பட வழிநடத்தியிருந்தார். இச்செயலமர்வு கல்லூரியின் சம்மந்தர் மண்டபத்தில் மதியம் 11.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 1.30 மணிக்கு நிறைவுற்றது. இந்துக்கல்லூரி மற்றும் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி A/L மாணவர்கள் இச்செயலமர்வின் பயனாளிகளாக விளங்கினர். தனது செயலமர்வினை மேம்படுத்திச் செல்வதற்கு ஊக்குவிப்புகளை வழங்கிய சில மாணவர்களுக்கு சிறிய பரிசில்கள் வழங்கி தனது செயலமர்வினை கச்சிதமாகவும், பயனுறுதி வாய்ந்ததாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் முன்னெடுத்து சென்றிருந்தார்.

அமெரிக்காவில் Intel Labs, Intel Corporation எனும் பெரிய நிறுவகத்தில் சிரேஷ்ட ஆய்வு விஞ்ஞானி (Senior Research Scientist) ஆக பணிபுரியும் இரத்னேஸ்வரனுக்கு ஒரு வெப்தளம் (Web site) Rath vannithamaby 5G எனும் பெயரில் உள்ளது. அதில் நுழைந்தால் அவரின் கண்டுபிடிப்புக்கள் சார்ந்த விடயங்களை அறிந்து கொள்ளலாம். இது காறும் நாம் பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசியில் உள்ள 2G, 3G தொழில்நுட்பத்தில் எமது பழைய மாணவன் Dr.இரத்னேஸ்வரனின் கண்டுபிடிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது என்ற விடயம் Dr. இரத்னேஸ்வரன் அவர்களினால் வெளிப்படுத்தும் வரை எங்களுக்கு தெரிய வாய்ப்பில்லாமல் இருந்தது. எனினும் இச்செய்தி கேட்டு செயலமர்வில் இருந்த அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்.

எமது கல்லூரிக்கும், திருமலை சமூகத்திற்கும் பெருமையையும் புகழையும் வழங்கிய Dr. இரத்னேஸ்வரன் உலகம் போற்றும் ஓர் விஞ்ஞானியாக எதிர்காலத்தில் மிளிரவேண்டும் என்று பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துவதோடு அவரின் வளர்ச்சிக்கு எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருள் கிடைக்க பிரார்த்திப்போமாக.

நன்றி

சண்.பாரதிநாதன்
பழைய மாணவர் சங்க உறுப்பினர்

---

## இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் இலங்கை காந்தி தியாகி இராஜாகோபால்



இந்தியா விடுதலை பெறுவதன் மூலம் இலங்கை விடுதலை அடைய முடியும் என்ற தரிசனத்தை அப்போதே கொண்டிருந்தவர் தியாகி இராஜாகோபால் ஆவார். இலங்கையில் இருந்து ஒரேயொருவர் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்காக இந்திய தேசிய விடுதலையில் சங்கமித்துள்ளார் என்பதை பலர் அறியவாய்ப்பு இல்லை. இந்திய தேசிய விடுதலைப்போராட்டத்தில் சங்கமிக்க 1932 ம் ஆண்டு திருக்கோணமலையில் இருந்து சென்ற தியாகி நாகை கோவிந்தன் ராஜாகோபால் அவர்கள் தி/ஸ்ரீ இராம கிருஸ்ண கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் பழைய மாணவர் என்பது எமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதாகும்.

சுவாமி விபுலானந்தர் அவர்களின் அன்புக்குரிய மாணவனான இவர் சுவாமி விவேகானந்தரின் "தேசபக்தியில் ஈர்க்கப்பட்டு தனது தேசபக்தியை பறைசாற்ற தனது தந்தையிடம் விடைபெற்று 1932ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி சென்னையை அடைந்து காங்கிரசில் சேர்ந்து உப்பு சத்தியாக்கிரகம் மற்றும் அன்னியதுணி மாறியல் யுத்த எதிர்ப்பு போராட்டம் என பல போராட்டங்களில் பங்கு பற்றி பலதடவைகள் சிறைவாசங்களும் அனுபவித்து விடுதலைப்போராட்டத்தில் மகத்தான பங்களிப்பை செய்தார். இவரின் உன்னதமான பணிக்காக காந்தியால் அங்கீகரிக்கப்பட்டு தியாகி பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னார் பலரின் வேண்டுகோளுக்கினங்க தனது இந்தியா விடுதலையில் தான்பெற்ற கல்வி மற்றும் அனுபவங்கள் "இந்திய விடுதலைப்போரில் இலங்கை மகன் பங்கு" என்னும் நூலின் ஊடாக சிறப்பாகவும் நேர்த்தியாகவும் ஆவணப்படுத்தியுள்ளார். ஒரு விடுதலைப்போராட்டம் எவ்வாறு இருக்கவேண்டும் போராளி எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதையும் மிக அழகாக கூறியுள்ளார் தியாகி இராஜாகோபால் அவர்கள் 1991ம் ஆண்டு ஆனி காலமானர். இவர் இறக்கும் வரை தியாகிகள் ஓய்வுதியம் பெற்று வந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதோடு எமது நாட்டின் சுதந்திரத்திற்கு போராடிய சேர் பொன் இராமநாதன், அனாகரிகதர்மபால, சித்திலெப்பை போன்றோர் வரிசையில் இவரும் சேர்க்கப்படவேண்டிய பெருமைக்குரியவர். 30.06.2014 அன்று இலங்கையின் காந்தி எனப்போற்றப்படுகின்ற தியாகி இராஜா கோபால் அவர்களின் 104 வது ஜெயந்தி தினம் தி/இராமகிருஸ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் காந்தி சேவை சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி அதிபர் தலைமைதாங்கியதுடன் திரு.கு.நளினகாந்தன் (காந்திசேவை சங்கம்) அவர்கள் வரவேற்புரையினையும் சிறப்புரையினை திரு.து.குலவீரசிங்கம் (தலைவர், சாயி சமித்தி) திரு.ந.புவநேந்திரன் (ஓய்வு நிலை உதவி அரச அதிபர்) செல்வி கா.மணிமேகலாதேவி (சிவஞானச்செல்வி) அவர்களும் நிகழ்த்தினர் நினைவுப்பேருரையை திரு.சி.தண்டாயுதபாணி (எதிர்கட்சி தலைவர் கிழக்கு மாகாணம்) அவர்கள் நிகழ்த்தினார். சமயப்பெரியார்களும் காந்திய வாதிகளும் மாணவர்களும் ஈகைச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செய்து சிறப்பித்தனர் நன்றியுரையினை திரு.இ.இரவீந்திரன் (பொறியியலாளர், நீர்பாசன திணைக்களம்) அவர்கள் நிகழ்த்த தமிழ் தாய் வாழ்த்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

-காயத்திரி நளினகாந்தன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Holcim (Lanka) Ltd,No.413, R. A. De Mel Mawatha, Colombo-03,
Hotline: +94 11 7800801,Tel: +94 11 7800800 Fax: +94 11 2506280 Website: www.holcim.lk

# EHJAS CONSTRUCTION

For over10 years, EHJAS has provided a wide range of Civil Construction& Supplying of Building Materials in Sri







On going Water Supply Construction Project at Trincomalee

Office
Kuttikarachchi, Kinniya – 05,
Trincomalee, Sri Lanka
Tel :026 2236046, Fax :026 2236046

SS digitals 0715415854

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org